# அக்டோபர், 2016 – எண்ணெய் பனை சாகுபடிக்கான ஆலோசனைகள்

- எண்ணெய்ப்பனையில் ஊடுபயிர் செய்யும் போது, தண்டு மற்றும் வேர் பகுதியை ஒட்டி உழவு செய்ய கூடாது. இலைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து கட்டவோ, மட்டைகளை வெட்டவோ கூடாது. அப்படி செய்வதால் மகசூல் குறையும்.

- எண்ணெய்ப்பனையில் ஊடுபயிர் செய்யும் போது, தண்டு மற்றும் வேர் பகுதியை ஒட்டி உழவு செய்ய கூடாது. எண்ணெய் பனையில் இருந்து 2-3 மீ தூரத்தில் தான் ஊடுபயிர் பயிரிட வேண்டும்.

- புதிதாக நடவு செய்த எண்ணெய்ப்பனை தோட்டங்களில், நடவு செய்த 3 மாதத்தில் உரமிட வேண்டும். இரண்டாம் தவணை உரமிடும் போது ஏக்கருக்கு 50-100 கி தொழு உரம், 100 கி பசுந்தாள் உரம் கலந்து இட வேண்டும். பனை ஒன்றிற்கு 5 கி வேப்ப புண்ணாக்கும் கலந்து இடலாம். தொழு உரம் நன்கு மக்கியதாக இருப்பது மிக முக்கியம்.

- உழவு செய்யும் போது, பனையின் தண்டுப்பகுதியை ஒட்டி உழவு செய்ய கூடாது. அவ்வாறு செய்வதால் வேர்கள் துண்டிக்கப்பட்டு நீர் மற்றும் சத்துகள் உறுஞ்சும் திறன் குறைந்து மகசூல் பதிக்கப்படும்.